மொழித்திறன் - 1

திணை

திணை

திணை என்பது வகுப்பு அல்லது பிரிவு எனப் பொருள்படும். அது உயர்திணை, அஃறிணை என இரு வகைப்படும்.



உயர்திணை: மக்கள், தேவர், நரகர் ஆகியவர்கள் உயர்திணையின் பாற்படுவார்கள்.

எடுத்துக்காட்டு: மாலன், மேரி, பாத்திமா, தந்தை

அஃறிணை:

அஃறிணை என்னும் சொல்லை அல் + திணை எனப் பிரிக்கலாம். அல்லாத திணை என்று பொருள் கொள்ளலாம். உயர்திணையைச் சேராத உயிர் உள்ளனவும் உயிரற்றனவும் அ.றிணை வகையினுள் அடங்கும். மக்கள், தேவர், நரகர் அல்லாத மற்ற உயிர் உள்ள, உயிர் அற்ற எல்லாம் அ.றிணையின் பாற்படும்.

எடுத்துக்காட்டு: காடு, கிளி, கன்று, குடம், நிலம்

உயர்திணை	அஃறிணை
அமலன்	சங்கு
அதிபர்	படகுகள்
அவள்	அது
அவர்கள்	அவை

www.lkedu.lk

பயிற்சி - 1

பின்வரும் சொற்களில் உயர்திணைச் சொற்களின் மீது (√) அடையாளத்தினையும் அ.்றிணைச் சொற்களின் மீது (×) அடையாளத்தினையும் இடுங்கள்.

கதிரை	விமானம்	கதிரை	தங்கை	ஆசிரியர்
ஒட்டகம்	மனைவி	கணவன்	உலகம்	காடு
தேனீ	அண்ணன்	கதவுகள்	வண்டுகள்	மாலா
தட்டு	மாமா	பெரியம்மா	வைத்தியர்	அப்பா

பயிற்சி - 2

பின்வரும் வாக்கியங்கள் உயர்திணையா? அ.்றிணையா? எனக் குறிப்பிடுக.

பயிற்சி அட்டை

சிவகாமி நல்லவள். ⟶ சிவகாமி - உயர்திணை

பலகையில் எழுதினான். ⟶ பலகை - அ.்றிணை

1. யானை பெரியது. ⟶ .....
2. குமரன் படிக்கிறான். ⟶ .....
3. வீடு அழகானது. ⟶ .....
4. காற்று வீசுகிறது. ⟶ .....
5. மாடு மேய்கின்றது. ⟶ .....
6. ஆசிரியர் வருகிறார். ⟶ .....
7. மயூரன் பாடுகிறான். ⟶ .....
8. அரங்கு பெரியது. ⟶ .....
9. விளக்கு எரிகிறது. ⟶ .....
10. புத்தகம் கிழிந்தது. ⟶ .....
11. வானம் இருண்டது. ⟶ .....
12. பாடகர் பாடுகிறார். ⟶ .....

www.ikdu.lk

பயிற்சி - 3

பின்வரும் வாக்கியங்கள் உயர்திணையா? அ்றிணையா? எனக் குறிப்பிடுக.

1. அரசன் நீதி தவறாது நாட்டை ஆட்சி செய்தான். .....
2. ஆகாய விமானம் வானத்தில் அழகாகப் பறந்தது. .....
3. நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டு பிடித்தார். .....
4. கிளிகள் சுவையான பழங்களைக் கொத்தித் தின்றன. .....
5. வீதியில் வாகனங்கள் வரிசையாகச் சென்றன. .....

பயிற்சி - 4

பின்வரும் சொற்களை அட்டவணைப்படுத்துக.

கப்பல், நடிகன், யானை, புத்தபெருமான், மேயும், பெற்றோர், பூனைகள், பாடினாள், ஓடின, தென்னை, அரசன், விமானி, தோணி, மாணவர், செங்கல், நடப்போம், விழும், பந்து, வந்தான், சிறுமி.

உயர்திணை	அ்றிணை
1.	1.
2.	2.
3.	3.
4.	4.
5.	5.
6.	6.
7.	7.
8.	8.
9.	9.
10.	10.

www.lkedu.lk

மொழித்திறன் - 2

லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்கள்

ழ	ள	ல
பழுத்தது வாழை வெடித்தது தாழை பெட்டிதான் பேழை	தென்னையில் பாளை வளர வேண்டும் மூளை அடுத்த நாள் நாளை	ஆட்டும் நாய் வாலை பொழுது எழும் காலை முறுக்கிடு நூலை

1.	உலவு	உழவு
2.	கலை	களை
3.	தலை	தழை
4.	நீலம்	நீளம்
5.	புலி	புளி
6.	வலை	வளை
7.	வாளை	வாழை
8.	வேலை	வேளை

1. அல்லி - அல்லி மலர் அள்ளி - எடுத்தல்
2. பாலை - நிலம், மரம் பாளை - தென்னம்பாளை
3. தோல் - சருமம் தோள் - புயம்
4. வலம் - வலப்பக்கம் வளம் - செழிப்பு
5. பாலம் - ஆற்றுப்பாலம் பாளம் - துண்டு

6.	வால் - உறுப்பு	வாள் - ஆயுதம்	வாழ் - வாழ்தல்
7.	அலை - திரை	அளை - வளை, புற்று	அழை - கூப்பிடு
8.	இலை - தாவர இலை	இளை - இளைத்தல்	இழை - நூல்
9.	கலி - துன்பம்	களி - மகிழ்	கழி - கழித்தல்
10.	வலி - நோவு	வளி - காற்று	வழி - பாதை

www.lkedu.lk

பயிற்சி - 1

(அ) லகர, ளகர, ழகர ஒலிவேறுபாட்டுச் சொற்களின் கருத்துக்களைத் தெரிவு செய்து தொடர்புபடுத்துவோம்.

i.	அழை	புற்று
	அளை	திரை
	அலை	கூப்பிடு
ii.	தழை	கட்டு
	தளை	ஓர் உறுப்பு
	தலை	செழிப்பு
iii.	வாழி	வானர அரசன்
	வாளி	வாழ்த்து
	வாலி	ஒரு பாத்திரம்

பயிற்சி - 2

வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) யானை ஒரு ..... மிக்க விலங்காகும்.
   1. பலம் 2. பழம்

2) வாழைப் ..... மிகவும் இனிமையானது.
   1. பலம் 2. பழம்

3) மத்திய மாகாணத்தில் அதிக ..... உண்டு.
   1. மழைகள் 2. மலைகள்

4) ..... நீர் மிகவும் தூய்மையானது.
   1. மழை 2. மலை

5) சிங்கத்தைக் கண்ட மான் ..... கொண்டு ஓடியது.
   1. கிளி 2. கிலி 3. கிழி

www.lkedu.lk

6) ..... பச்சை நிறம் கொண்டது.
1. கிழி 2. கிளி 3. கிலி

7) தம்பி எனது புத்தகத்தைக் .....
1. கிழித்தான் 2. கிளித்தான் 3. கிலித்தான்

8) ஆலய மணி .....
1. ஒழித்தது 2. ஒளித்தது 3. ஒலித்தது

9) சூரியனது ..... மிகவும் பிரகாசமாக இருந்தது.
1. ஒலி 2. ஒளி 3. ஒலி


10) டெங்கு நோயை முற்றாக .....
1. ஒழிப்போம் 2. ஒலிப்போம் 3. ஒளிப்போம்


www.lkedu.lk

மொழித்திறன் - 3
பால்

பால்

பால் என்றால் பிரிவு என்று பொருள். உலகில் உள்ள அனைத்தையும் திணை அடிப்படையில் பால்களாகப் பிரிக்கலாம். அவையாவன:





உயர்திணைக்குரிய பால்கள் மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளன.

1. ஆண்பால் 2. பெண்பால் 3. பலர்பால்

- **ஆண்பால்**
  உயர்திணையில் ஆண்களில் ஒருமையைக் குறிப்பது ஆண்பால் எனப்படும்.

  எடுத்துக்காட்டு: சங்கரன், கரீம்

- **பெண்பால்**
  உயர்திணையில் பெண்களில் ஒருமையைக் குறிப்பது பெண்பால் எனப்படும்.

  எடுத்துக்காட்டு: யாழினி, பாத்திமா

- **பலர்பால்**
  உயர்திணையைச் சேர்ந்த எல்லாப் பன்மைச் சொற்களும் பலர்பால் எனப்படும்.

  எடுத்துக்காட்டு: மக்கள், ஆண்கள், பெண்கள்

  இந்த எடுத்துக்காட்டுகளில் மக்கள் என்னும் சொல் ஆண், பெண்களில் பலரைக் குறிக்கிறது.

  ஆண்கள் என்னும் சொல் **ஆண்களில் பலரைக்** குறிக்கிறது.
  பெண்கள் என்னும் சொல் **பெண்களில் பலரைக்** குறிக்கிறது.

www.lkedu.lk

அ.்றிணைக்குரிய பால் இரண்டு வகையாக வகுக்கப் பட்டுள்ளது.

1) ஒன்றன்பால்
2) பலவின்பால்

- சில அ.்றிணைப் பொருள்கள் ஆண், பெண் வேறுபாட்டை உணர்த்துவதில்லை. எனவேதான் இலக்கண ஆசிரியர்கள் ஒன்றன்பால், பலவின்பால் எனும் பகுப்பை அமைத்திருக்கின்றனர்.

எடுத்துக்காட்டு : கோழி, சேவல் என்பதில் பால் காட்டப்படுகிறது.
பறவை, மரம், மேசை என்பவற்றில் பால் காட்டப்படுவதில்லை.

- ஒன்றன்பால்
  அ.்றிணையில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால் எனப்படும்.
  எடுத்துக்காட்டு: அது, யானை, வீடு

- பலவின்பால்
  அ.்றிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் எனப்படும்.
  எடுத்துக்காட்டு: அவை, வீடுகள், யானைகள்

www.lkedu.lk

பயிற்சி - 1

பின்வரும் சொற்களைக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்க.

தாத்தா	அரசன்	சங்கரி	தாதிகள்	சிறுமி	நண்பர்கள்
கீதன்	தம்பி	ஓவியர்கள்	பாடகன்	ஆண்கள்	பாட்டி
மாமி	பெண்கள்	பாற்காரி	நந்தினி	சேவகன்	
விவசாயிகள்	அண்ணன்	மாமி	பிள்ளைகள்		

ஆண்பால்	பெண்பால்	பலர்பால்
1.	1.	1.
2.	2.	2.
3.	3.	3.
4.	4.	4.
5.	5.	5.
6.	6.	6.
7.	7.	7.

பயிற்சி - 2

பூ	சுறாக்கள்	அவை	விதைகள்	இது	மணி	குதிரைகள்
வீடு	மீன்	புறா	சட்டிகள்	முட்டைகள்	கதவு	கணினிகள்

ஒன்றன் பால்	பலவின் பால்
1.	1.
2.	2.
3.	3.
4.	4.
5.	5.
6.	6.
7.	7.

சாராம்சம்

- திணை
- லகர, ளகர, ழகர வேறுபாடு
- பால்

www.lkedu.lk

ENGLISH

Things in the class room

வகுப்பறைப் பொருட்கள்

1. **chair** - கதிரை
2. **desk** - சாய்வு மேசை
3. **black board** - கரும்பலகை
4. **chalk** - வெண்கட்டி
5. **table cloth** - மேசை விரிப்பு

சிங்களம்

பழதுறு

பழங்கள்

1. அம்(B)ப - மாம்பழம்
2. கெசெல் - வாழைப்பழம்
3. வர(க்)கா - பலாப்பழம்
4. தொடம் - தோடம்பழம்
5. திவுள் - விளாம்பழம்

www.lkedu.lk

மொழித்திறன் - 4

தமிழ் எழுத்துகள்

தமிழில் உள்ள எழுத்துகளை உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள் மற்றும் ஆய்த எழுத்து என வகைப்படுத்தலாம்.

உயிர் எழுத்துகள்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
1	2	3	4	5	6	7	8	9	10	11	12

மெய் எழுத்துகள்

க்	ங்	ச்	ஞ்	ட்	ண்	த்	ந்	ப்	ம்	ய்	ர்	ல்	வ்	ழ்	ள்	ற்	ன்
1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18

உயிர் எழுத்துகள் 12, மெய்யெழுத்துகள் 18 ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும்.

உயிர்மெய் எழுத்துகள்

உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துகளும் சேர்ந்து உயிர்மெய் எழுத்துகள் உண்டாகின்றன.

மெய்	+	உயிர்	=	உயிர்மெய்
க்	+	இ	=	கி

ஆய்த எழுத்து

தமிழ் மொழியில் ஃ என்று ஓர் எழுத்து உள்ளது, இதை ஆய்த எழுத்து என்று கூறுவர்.

தமிழில் உள்ள மொத்த எழுத்துகள்

உயிர் எழுத்துகள்	12
மெய் எழுத்துகள்	18
உயிர் மெய் எழுத்துகள்	216
ஆய்த எழுத்து	1
மொத்தம்	247

www.lkedu.lk


பயிற்சி - 1

(அ) பொருத்தமான எழுத்துகளை இடைவெளியில் எழுதுவோம்.

ண் ப் ன் ற் ர் ம் ச் ல் ஞ் க் ட்
ழ் ய் ள் ங் ந் வ் த்

1. வல்லின எழுத்துகள் : .....
2. மெல்லின எழுத்துகள் : .....
3. இடையின எழுத்துகள் : .....

(ஆ) வெற்றுக்கூடுகளில் பொருத்தமான எழுத்துகளின் எண்ணிக்கையை எழுதுவோம்.



www.tlkedu.lk

(இ) சரியான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுவோம்.

1. உயிர் எழுத்துகள் எத்தனை?

   i. பதினெட்டு ii. பன்னிரண்டு iii. முப்பது

2. மெய் எழுத்துகள் எத்தனை?

   i. முப்பது ii. பதினெட்டு iii. பன்னிரண்டு

3. உயிர்மெய் எழுத்து எது?

   i. அ ii. ப் iii. கி

4. ஆய்த எழுத்து எது?

   i. ப் ii. ஃ iii. ஐ

1.5 பின்வரும் வாக்கியங்களிலிருந்து வல்லினம், மெல்லினம், இடையினம் என எழுத்துகளை வகைப்படுத்தி எழுதுவோம்.

உதாரணம் : பூவின் மணம் மனதிற்கு இன்பம் தரும்.

வல்லினம்	மெல்லினம்	இடையினம்
ற்	ன், ம்	-

1. இட்லி பஞ்சு போன்று மென்மையாக இருந்தது.

வல்லினம்	மெல்லினம்	இடையினம்

2. ஓடிச் சென்ற கந்தன் கால் தடுக்கிக் கீழே விழுந்தான்.

வல்லினம்	மெல்லினம்	இடையினம்

3. கடற்கரையில் சிறுவர்கள் பட்டம் விட்டு விளையாடினார்கள்.

வல்லினம்	மெல்லினம்	இடையினம்

4. நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியை நன்றாகக் கற்க வேண்டும்.

வல்லினம்	மெல்லினம்	இடையினம்

www.lkedu.lk

மொழித்திறன் - 5

ஒத்த கருத்துச் சொற்கள்	
கூடு - அடைப்பு, பறவைக்கூடு	மதி - சந்திரன், அறிவு
குறி - அடையாளம், இலக்கு	முடி - கிரீடம், குடுமி
உரம் - எரு, வலிமை	வடு - குற்றம், தழும்பு
நகை - ஆபரணம், இகழ்ச்சி	வாகை - வெற்றி, ஒரு மரம்
படை - சேனை, அடுக்கு	உறுதி - சத்தியம், வலிமை

பயிற்சி - 1

ஒத்தகருத்துச் சொற்கள்

கூடு -	வடு - .....
உரம் -	..... - அறிவு
..... - ஆபரணம்	..... - சேனை
..... - அடையாளம்	வாகை - .....
முடி -	..... - வலிமை

www.lkedu.lk

பயிற்சி - 2

பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

ஒத்தகருத்துச் சொற்கள்

1.	இரை	-	6.	சுகை	-
2.	நாடு	-	7.	ஏர்	-
3.	தோழர்	-	8.	செய்தித்தாள்	-
4.	மாற்றான்	-	9.	செவி	-
5.	நதி	-	10.	வீதி	-

கொடை	தெரு	கலப்பை	நாளிதழ்	காது
தேசம்	நண்பர்	உணவு	பகைவன்	ஆறு

www.lkedu.lk